திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செய்முறைகள்

ப.மு.எண். 3288 /அ1/2025 நாள். .04.2025

பொருள். தமிழ்நாடு அமைச்சுப்பணி - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை. 1. திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.10246/அ1/2023, நாள். 27/09/2023.

2. மடம் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரின் கடித ந.க.எண். 45/2025 நாள். 28.03.2025

//////

பார்வை (1)ல் காணும் திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்பட்டு. மடம், அரசு மேல்நிலைப்பள்ளியில் 29.09.2023 முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் திரு.கு.சதீஷ்பாபு என்பாரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவரது பெயருக்கு எதிரே கலம்(4)ல் குறிப்பிட்டுள்ள தேதியில் கீழ்காணும் நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.கு.சதீஷ்பாபு<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மேல்நிலைப்பள்ளி<br>மடம் | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

6. பணிவரன்முறை செய்யப்படும் தேதியில் இருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவகாலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

2. தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சியினை முடித்து தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
3. தகுதிகாண் பருவம் முடித்து ஆணை பெற்ற பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.
4. இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்படும் தேதியில் இருந்து ஐந்தாண்டுகளுக்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை எனில் இளநிலை உதவியாளர் பதவியில் நீடிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.
5. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை உரியவரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.

21/04/25

முதன்மைக் கல்வி அலுவலர்
திருவண்ணாமலை
21/4/25

பெறுநர்

1.சார்ந்த பணியாளர்(தலைமை ஆசிரியர் வழியாக)

நகல்

தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, மடம்

Scanned with OKEN Scanner